## பத்தாம் வகுப்பு, தமிழ் – முதல் தாள் (மாதிரி வடிவமைப்பு)
## (செய்யுள், உரைநடை)

காலம் – 2.30 மணி | மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **ஐந்து பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

### பிரிவு – I
### ( மதிப்பெண்கள் : 20 )
### பகுதி – 1

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.** **6 x 1 = 6**

1. செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது:
   அ) ஒழுக்கம் ஆ) காலமறிதல் இ) அடக்கமுடைமை ஈ) பெரியாரைத் துணைக்கோடல்
2. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்:
   அ) முத்து ஆ) பவளம் இ) மாணிக்கம் ஈ) மரகதம்
3. கம்பரைப் புரந்தவர்
   அ) ஔவையார் ஆ) புகழேந்தி இ) சடையப்ப வள்ளல் ஈ) சீதக்காதி
4. பெண் அடிமையானதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ____________ இல்லாமை:
   அ) வாக்குரிமை ஆ) பேச்சுரிமை இ) சொத்துரிமை ஈ) எழுத்துரிமை
5. கீழ்க்காண்பனவற்றுள் காந்தியடிகளின் மனங்கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து:
   அ) இன்னாசெய்யாமை ஆ) இன்சொல் கூறுதல் இ) எளிமை ஈ) சிக்கனம்
6. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ____________
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) பேச்சுக்கலை ஈ) நடனக்கலை.

### பகுதி – 2

**கோடிட்ட இடட்தை நிரப்புக.** **6 x 1 = 6**

7. தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீங்குவதே ____________ என நற்றிணை குறிப்பிடுகிறது.
8. பெரியபுராணத்திற்குச் சேக்கிழார் இட்டபெயர் ____________.
9. “திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப்
   புகழ்பா வினங்கள் மடைப் போக்கா”
   – இப்பாடலடிகளில் செய்யுளின் வரம்புகளாகக் குறிப்பிடப்படுபவை ____________.
10. மும்பையில்அம்பேத்கர் சிறிது காலம் ____________ பேராசிரியராகப் பணியாற்றினார்.
11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ____________ இருக்கும்.
12. தமிழர்கள் நிலத்தை ____________ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.



www.kalvisolai.com - 1 of 22.

## பகுதி – 3

பொருத்துக. 4 x 1 = 4

| | | | |
|---|---|---|---|
| 13. | தேவாரம் | – | அ) உமறுப்புலவர் |
| 14. | சீறாப்புராணம் | – | ஆ) நல்லந்துவனார் |
| 15. | கலித்தொகை | – | இ) சாலை. இளந்திரையன் |
| 16. | பூத்தது மானுடம் | – | ஈ) திருநாவுக்கரசு |

## பகுதி – 4

தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க. 4 x 1 = 4

17. இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின.
18. இராமலிங்கர் தமிழ்மொழியே இறவாத நிலை தரும் என்று கூறினார்.
19. தமிழர்கள் அரபு நாட்டுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தார்கள்.
20. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

## பிரிவு – II
### ( மதிப்பெண்கள் : 20 )
### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** 5 x 2 = 10

21. இறைப்பற்று உடையவர்களின் செயல் எவ்வாறு இருக்கவேண்டுமென மாணிக்க வாசகர் கூறுகிறார் ?
22. குகன், இராமன் மீதுகொண்ட அன்பை வெளிப்படுத்திய செயல்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
23. "ஈறில்பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே

    வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்." – யார், யாரிடம் வினவினார் ?
24. கலம்பகம் – குறிப்பெழுதுக.
25. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?
26. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?
27. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?

## பகுதி – 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** 5 x 2 = 10

28. பண்பட்ட உயர்ந்த சிந்தனை தமிழ்மொழியில் அமைந்திருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டினைத் தருக.
29. விளக்கப்படம் – குறிப்பெழுதுக.
30. தமிழகம் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது என்பதற்கு ஒரு சான்று தருக.



www.kalvisolai.com - 2 of 22.

31. உலகம் என்னும் சொல்லின் பெயர்க்காரணம் கூறுக.

32. பகட்டான வாழ்வை விரும்பாதவர் காந்தியடிகள் – இக்கூற்றை விளக்குக. நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள நிகழ்வைக் குறிப்பிடுக.

33. மக்கள் சமுதாயம் எவ்வாறு வாழவேண்டும் என்று இராமலிங்கர் விரும்பினார் ?

34. தற்போது வளர்ந்துவரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

## பிரிவு – III

### ( மதிப்பெண்கள் : 24 )

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி.** **3 x 4 = 12**

35. அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றாகும் – இக்கருத்தைச் சிலப்பதிகாரம் எவ்வாறு வெளிப்படுத்துகிறது ?

36. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன ?

37. புலியின் கொடுஞ்செயல்களாக உமறுப்புலவர் கூறுவன யாவை ?

38. இன்று இளைப்பாறுவோம் என்று இருக்கக்கூடாது, ஏன் ?

39. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

### பகுதி – 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

40. கைம்பெண் மணத்தை ஆதரித்தவர் பெரியார் – இக்கூற்றைச் சான்றுகாட்டி நிறுவுக.

41. மேடைப்பேச்சில் மொழி எவ்வாறு அமைதல் வேண்டும் ?

42. இந்தியாவில் மனித உரிமைக்காக முதலில் நடைபெற்ற போராட்டங்களை எழுதுக.

43. தமிழர் இசைக்கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதை நிறுவுக.

44. காந்தியடிகள், தம் வாழ்வில் வாய்மையைக் கடைப்பிடிக்க அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சியை விளக்குக.

## பிரிவு – IV

### ( மதிப்பெண்கள் : 10 )

45. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

> “தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
> முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
> உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
> விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.’’

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?
2. முத்தமிழ் – விரித்து எழுதுக.
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.
4. உன்னோடுவந்துரைக்கும் – பிரித்து எழுதுக.
5. விளம்பக்கேள் – பொருள் எழுதுக.



www.kalvisolai.com - 3 of 22.

**46. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5**

வினையே ஆடவர்க்குயிர் என்கிறது குறுந்தொகை. முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடட்தவேண்டும் எனவும், பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாது எனவும் கூறி வந்தனர். இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில் இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பட்தைச் சிறப்பாக நடட்த இயலும்.

பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்குமேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெறவேண்டும். தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

1. ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது ?
2. முந்நீர் – இத்தொகைச்சொல்லை விரிட்தெழுதுக.
3. மகடூஉ – இச்சொல்லின் பொருள் யாது ?
4. தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது ?
5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.

**பிரிவு – V**

**( மதிப்பெண்கள் : 26 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக. 2 x 8 = 16**

47. (அ) சிலப்பதிகார வழக்குரை காதையில், பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவியின் இறப்பு, இளங்கோவடிகளால் எவ்வாறு நியாயப் படுத்தப்படுகிறது ?

(அல்லது)

(ஆ) பெரியாரைத் துணைக்கோடலினால் விளையும் நன்மைகள் குறித்து வள்ளுவர் கூறுவன யாவை ?

48. (அ) தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்னும் கூற்றை மெய்ப்பிக்க ஐந்து சான்றுகள் தருக.

(அல்லது)

(ஆ) மேனிலைக்கல்வி, பல்துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற அடிப்படையாக அமைவதை உரிய எடுத்துக்காட்டுகள் தந்து நிறுவுக.

**பகுதி – 2**

49. **செய்யுள் வடிவில் விடை தருக. 2 + 2+ 6 = 10**

(அ) ‘செய்க பொருளை’ – எனத் தொடங்கும் குறள்

(ஆ) ‘செயல்’ என முடியும் குறள்.

(இ) ‘வாயிற்கடைமணி... புகாரென்பதியே’ – சிலப்பதிகாரப் பாடல்வரிகள்.

*****

# தமிழ் - முதல் தாள்

## (செய்யுள், உரைநடை)

## மாதிரி வினாத்தாள் – 1

காலம் – 2.30 மணி　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **ஐந்து பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

### பிரிவு – I

**( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**　　　　　　　　　　　　　　　　**6 x 1 = 6**

1. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் ____________ .

   (அ) நால்வர் நான்மணிமாலை　　(ஆ) திருவள்ளுவமாலை

   (இ) இரட்டை மணி மாலை　　(ஈ) சகலகலா வல்லி மாலை

2. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாடியவர்____________ .

   (அ) கவிமணி　(ஆ) பாரதிதாசன்　(இ) பாரதியார்　(ஈ) நாமக்கல் கவிஞர்

3. கம்பரைப் புரந்த வள்ளல் ____________ .

   (அ) ஔவையார்　(ஆ) புகழேந்தி　(இ) சடையப்பவள்ளல்

   (ஈ) சோழ மன்னன்

4. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போதுதான் நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்று கூறியவர்.

   (அ) திரு.வி.க.　(ஆ) பெரியார்　(இ) பாரதியார்　(ஈ) மறைமலையடிகள்

5. காந்தியடிகள் ____________ நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.

   (அ) சிரவணபிதுர்பத்தி　　(ஆ) அரிச்சந்திரன்

   (இ) பக்த பிரகலாதன்　　(ஈ) இராமாயணம்

6. இறைவனை ____________ வடிவினனாகக் கண்டவர் வள்ளலார்.

   (அ) ஒலி　(ஆ) ஒளி　(இ) இருள்

**பகுதி – 2**

**கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.** **6 x 1 = 6**

7. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ______________பேரெல்லையும் கொண்ட நூல்.
8. சேக்கிழார் பெருமான் அருளியது ______________.
9. போலிப்புலவர்களைத் தலையில் குட்டியவர் ______________.
10. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ______________.
11. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் ______________ என அழைப்பர்.
12. திருமூலர் எழுதிய நூல் ______________.

**பகுதி – 3**

**பொருத்துக.** **4 x 1 = 4**

| | | | |
|---|---|---|---|
| 13. | தேவாரம் | – | திருமூலர் |
| 14. | சீறாப்புராணம் | – | நல்லந்துவனார் |
| 15. | கலித்தொகை | – | சாலை. இளந்திரையன் |
| 16. | பூத்தது மானுடம் | – | திருநாவுக்கரசர் |

**பகுதி – 4**

**தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க.** **4 x 1 = 4**

17. தொடுதல், எடுத்தல், முடித்தல் என்பன பேச்சின் முக்கூறுகள்.
18. தமிழர்கள் நிலத்தை ஆறு வகைகளாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
19. பரிதிமாற் கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.
20. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

**பிரிவு – II ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

21. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன் ?
22. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?
23. கம்பர் – சிறு குறிப்பு வரைக.
24. 'நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல் ?', யார் யாரிடம் கூறியது ?

25. நன்னெறி விதைகள் யாவை ?

26. சிவபெருமான் எத்தன்மையன் ?

27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?

**பகுதி – 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

28. தமிழ்மொழியின் தனித்தன்மைகள் யாவை ?

29. திரைப்படச் சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை ?

30. நோய் வருவதற்கான காரணம் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன ?

31. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை ?

32. சுத்த சன்மார்க்க சங்கத்தின் நோக்கங்கள் இரண்டினைக் கூறுக.

33. தமிழகத்திலிருந்து எந்தெந்த நாடுகளுக்கு எந்தெந்தப் பொருள்கள் அனுப்பப்பட்டன ?

34. வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் அமுதசுரபியாக விளங்குபவை யாவை ?

## பிரிவு – III

**( மதிப்பெண்கள் : 24 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி.** **3 x 4 = 12**

35. தமிழர் எதற்கு நாண வேண்டும் ?

36. வாயிற் காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

37. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன ?

38. வயல் தரும் விளைவுகள் யாவை ?

39. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக் கலம்பகம் கூறுவன யாவை ?

**பகுதி – 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

40. பெண்கல்வி குறித்து பெரியார் கூறும் கருத்துகள் யாவை ?

41. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?



www.kalvisolai.com - 7 of 22.

42. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

43. காந்தியடிக்ளைக் கவர்ந்த நாடகம் எது ? விளக்குக.

44. எளிமை ஓர் அறம் என்பதைக் காந்தியின் வாழ்க்கையிலிருந்து விளக்குக.

## பிரிவு – IV

**( மதிப்பெண்கள் : 10 )**

**45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

“தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.’’

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

2. முத்தமிழ் – விரித்து எழுதுக.

3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.

4. உன்னோடுவந்துரைக்கும் – பிரித்து எழுதுக.

5. விளம்பக்கேள் – பொருள் எழுதுக.

**46. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

தமிழ் மொழியின் இலக்கண அமைப்புத் தனிச் சிறப்புடையது, நுண்ணிய அறிவை உண்டாக்க வல்லது. தமிழ் இலக்கணம் படிக்கப்படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட். நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது தொல்காப்பியம். இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது. தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு அகத்தியம் என்று பெயர். அறிவியல் முறையில் அமைந்த இத்தகைய இலக்கண நூல்கள் தோன்ற வேண்டுமென்றால் இதற்குக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாவது தமிழ்மொழி தோன்றி செம்மைநிலை அடைந்திருக்க வேண்டும். அத்தகைய இலக்கிய இலக்கண வளமுடையது தமிழ்மொழி.

1. தமிழ் இலக்கணம் குறித்து கெல்லட்டின் கருத்து யாது ?

2. நமக்குக் கிடைத்த மிகப் பழைமையான இலக்கண நூல் எது ?



www.kalvisolai.com - 8 of 22.

3. தொல்காப்பியரின் ஆசிரியர் யார்?

4. அகத்தியர் கூறும் இலக்கணங்கள் யாவை?

5. இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பினை எழுதுக.

## பிரிவு – V

**( மதிப்பெண்கள் : 26 )**

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.**

**2 x 8 = 16**

47. (அ) 'தேரா மன்னா' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

(அல்லது)

(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வதன் இலக்கணம், அதனால் வரும் சிறப்பு, பெரியார் துணையில்லாத வழி ஏற்படும் இழிவு ஆகியன குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. (அ) தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்னும் கூற்றை நிறுவ ஐந்து சான்றுகள் தருக.

(அல்லது)

(ஆ) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

### பகுதி – 2

49. **செய்யுள் வடிவில் விடை தருக.** **2 + 2 + 6 = 10**

(அ) ஒழுக்கம் ..... எனத் தொடங்கும் குறள்

(ஆ) செயல் என முடியும் குறள்.

(இ) வாயிற்கடைமணி... எனத் தொடங்கி கோவலன் மனைவி என முடியும் சிலப்பதிகாரப் பாடல்வரிகள்.

# தமிழ் - முதல் தாள்

## (செய்யுள், உரைநடை)

## மாதிரி வினாத்தாள் – 2

காலம் – 2.30 மணி    மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **ஐந்து பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I**

**( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**    **6 x 1 = 6**

1. ‘இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே’ எனப்பாடியவர்.

   (அ) பாரதியார்   (ஆ) சுரதா   (இ) பாரதிதாசன்   (ஈ) முடியரசன்

2. “தேரா மன்னா” என்று கண்ணகி குறிப்பிட்ட மன்னன்_____________ .

   (அ) பாண்டிய மன்னன்   (ஆ) சேர மன்னன்

   (இ) சோழ மன்னன்   (ஈ) பல்லவமன்னன்

3. ‘அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம்’ என்று குகனிடம் கூறியவன் _____________ .

   (அ) இராமன்   (ஆ) இலக்குவன்   (இ) பரதன்   (ஈ) சத்ருக்கனன்

4. இன்றைய மதுரையில் _____________ தமிழ்ச்சங்கம் இருந்தது.

   (அ) மூன்றாம்   (ஆ) இரண்டாம்   (இ) முதலாம்   (ஈ) நான்காம்

5. அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன் எனக் கூறியவன் _____________ .

   (அ) சிரவணன்   (ஆ) அரிச்சந்திரன்   (இ) குகன்   (ஈ) வீடணன்

6. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் _____________ .

   (அ) கே. அப்பாத்துரையார்   (ஆ) மு. வரதராசனார்

   (இ) பேரறிஞர் அண்ணா   (ஈ) கீ.ஆ. பெ. விசுவநாதம்



www.kalvisolai.com - 10 of 22.

## பகுதி – 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6 x 1 = 6**

7. நற்றிணையிலுள்ள அரி என்னும் சொல்லின் பொருள் ____________ ஆகும்.
8. 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவி வலவ' எனப் பாடியவர் ____________.
9. தமிழ்விடுதூது ____________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
10. பெரியார் சமூக ____________ எதிர்த்தவர்.
11. இயங்குரு படங்கள் பார்ப்பதற்கு ____________ இருக்கும்.
12. திருநாவுக்கரசரின் தமக்கையார் ____________ ஆவார்.

## பகுதி – 3

**பொருத்துக.** **4 x 1 = 4**

| | | | |
|---|---|---|---|
| 13. | எண்கு | – | ஓய்வெடுத்தல் |
| 14. | பண்பு | – | சுற்றுதல் |
| 15. | இளைப்பாறுதல் | – | கரடி |
| 16. | உலவு | – | பாடறிந்து ஒழுகுதல் |

## பகுதி – 4

**தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க.** **4 x 1 = 4**

17. 1918இல் மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.
18. வள்ளலாரின் இயற்பெயர் இராமலிங்கம்
19. தமிழர்கள் மனித வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனர்.
20. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி மேனிலைக் கல்வியில் தேர்ச்சி ஆகும்.

## பிரிவு – II

**( மதிப்பெண்கள் : 20 )**

## பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

21. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?
22. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
23. குகனின் வேண்டுகோள் யாது ?
24. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர் ?

25. நால்வகைப் பாக்கள் யாவை ?

26. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார் ?

27. அறிவு எனப்படுவது யாது ?

**பகுதி – 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

28. தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

29. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?

30. இயலிசை நாடகக் கலைஞர்கள் யாவர் ?

31. அணு பற்றிய கம்பரின் கருத்து யாது ?

32. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?

33. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார் ?

34. தற்போது வளர்ந்துவரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

**பிரிவு – III**

**( மதிப்பெண்கள் : 24 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையயெழுதுக.** **3 x 4 = 12**

35. ஒழுக்கத்தின் சிறப்பினை எழுதுக.

36. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

37. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை ?

38. பெரியாரது இலக்கணம் குறித்து வள்ளுவர் கூறுவது யாது ?

39. கலித்தொகை – குறிப்பு எழுதுக.

**பகுதி – 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

41. மேடைப் பேச்சின் திறம் குறித்து குறள் கூறும் செய்திகளை எழுதுக.

42. தொன்மைத் தமிழகத்தின் உழவுத் தொழில் குறித்து எழுதுக.

43. இளைஞர்களின் கடமைகளாகக் காந்தியடிகள் கூறுவன யாவை ?

44. இராணுவம், காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான தகுதிகள் யாவை ?

## பிரிவு – IV

**( மதிப்பெண்கள் : 10 )**

**45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

"அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே – விரிவார்
திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கள் மடைப் போக்கா – நிகழவே.''

1. அரியாசனம் என்பதன் பொருளை எழுதுக.
2. பா ஒரு நான்கு என்னும் தொடரில் குறிக்கும் நால்வகைப் பாக்களின் பெயர்களை எழுதுக.
3. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
5. பாவினங்கள் – இச்சொல்லைப் பிரித்தெழுதுக.

**46. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வணிகத் தொடர்பு இருந்தது.

**வினாக்கள்**

1. கடல் வாணிகத்தில் சிறந்திருந்தவர் யார் ?
2. கடல் கடந்து வாணிகம் செய்த பொருள்கள் யாவை ?



www.kalvisolai.com - 13 of 22.

3. கிறித்து பிறப்பதற்கு முன் எந்தெந்த நாடுகளுடன் தமிழர்கள் வாணிகம் செய்தனர் ?

4. அரசன் சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொருள்கள் யாவை ?

5. இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பினை எழுதுக.

## பிரிவு – V

**( மதிப்பெண்கள் : 26 )**

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

**2 x 8 = 16**

**47.** (அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**48.** (அ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) செம்மொழியின் செவ்வியல் தன்மை குறித்தும் நிலைத்த மொழி குறித்தும் விளக்குக.

### பகுதி – 2

**49. செய்யுள் வடிவில் விடை தருக.** **2 + 2 + 6 = 10**

(அ) 'பகல்' ..... எனத் தொடங்கும் குறள்

(ஆ) 'உயர்வு.' என முடியும் குறள்.

(இ) 'மெய்தான் அரும்பி'... எனத் தொடங்கி 'கண்டு கொள்ளே' என முடியும் வாழ்த்துப் பாடலடிகள்.

# தமிழ் - முதல் தாள்

## (செய்யுள், உரைநடை)

## மாதிரி வினாத்தாள் – 3

காலம் – 2.30 மணி | மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **ஐந்து பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.** **6 x 1 = 6**

1. திருக்குறள் ____________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.

   (அ) சிந்தியல் (ஆ) குறள் (இ) நேரிசை (ஈ) இன்னிசை

2. சிலப்பதிகாரமும் ____________ இரட்டைக் காப்பியங்கள் ஆகும்.

   (அ) மணிமேகலையும் (ஆ) சீவகசிந்தாமணியும்

   (இ) வளையாபதியும் (ஈ) குண்டலகேசியும்

3. தேனையும் மீனையும் இராமனுக்கு அன்புடன் அளித்தவன் ____________ .

   (அ) இலக்குவன் (ஆ) பரதன் (இ) குகன் (ஈ) சுக்ரீவன்

4. பெண்ணடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ____________ .

   (அ) வாக்குரிமை இன்மை (ஆ) பேச்சுரிமை இன்மை

   (இ) சொத்துரிமை இன்மை (ஈ) எழுத்துரிமை இன்மை

5. பகைவனிடமும் அன்புகாட்டு எனக் கூறிய நூல் ____________ .

   (அ) நன்னூல் (ஆ) தொல்காப்பியம் (இ) பைபிள் (ஈ) நேமிநாதம்

6. சத்திய தருமச் சாலையை நிறுவியவர் ____________ .

   (அ) வள்ளலார் (ஆ) திரு.வி.க. (இ) மறைமலையடிகள் (ஈ) மு.வரதராசனார்

**பகுதி – 2**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6 x 1 = 6**

7. ‘சான்றோர் சான்றோர் பாலர் ஆப’ என்று கூறிய நூல் ____________.



www.kalvisolai.com - 15 of 22.

8. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ____________.

9. போலிப் புலவர்களின் தலையை வெட்டியவர் ____________.

10. சட்ட மாமேதை என அழைக்கப்படுபவர் ____________.

11. படப்பிடிப்புக் கருவியை ____________ பொருத்துவதும் உண்டு.

12. உழுவை என்பதன் பொருள் ____________.

**பகுதி – 3**

**பொருத்துக.** **4 x 1 = 4**

| | | | |
|---|---|---|---|
| 13. | நடலை | – | மூங்கில் |
| 14. | பணை | – | துன்பம் |
| 15. | முற்றிடம் | – | தொங்குதல் |
| 16. | ஞால் | – | முடியுமிடம் |

**பகுதி – 4**

**தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க.** **4 x 1 = 4**

17. நுண்ணிய நூல்பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை பேச்சுக்கலை.

18. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது நன்னூல்.

19. தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

20. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

**பிரிவு – II ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

21. என்றும் இடும்பை தருவது எது ?

22. ஞாலம் கருதினும் கைகூடும் – எப்போது ?

23. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான் ?

24. பெரியபுராணம் – குறிப்பு எழுதுக.

25. வன்மையுள் எல்லாம் தலையாயது எது ?

26. நாற்கரணங்கள் யாவை ?

27. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர். ?

**பகுதி – 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

28. தொல்காப்பியம் குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது ?

29. மொழி மாற்றம் என்றால் என்ன ?

30. பண்டைக் காலத்து ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

31. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.

32. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது ?

33. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

34. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும் ?

## பிரிவு – III ( மதிப்பெண்கள் : 24 )

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழ நாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

36. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழி தொகுத்துஎழுதுக.

38. கலம்பகம் – குறிப்பு எழுதுக.

39. குலசேகர ஆழ்வார் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது ?.

### பகுதி – 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

40. பெண் உரிமையை விளக்குக.

41. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

42. தொன்மைத் தமிழகம் பற்றிச் சிலப்பதிகாரம் கூறும் செய்தி யாது ?

43. மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியதை விளக்குக.

44. சிறுதொழில் பயிற்சி பற்றிக் குறிப்பு எழுதுக.

## பிரிவு – IV ( மதிப்பெண்கள் : 10 )

45. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

“நல்லேரி னால்செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி – நல்லநெறி
நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள் – மேலோரில்.’’

1. நாற்கரணம் – பிரித்து எழுதுக.
2. சொல்லேர் உழவர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர் ?
3. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக.
5. நாற்பொருள் – விரித்து எழுதுக.



www.kalvisolai.com - 17 of 22.

**46. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

காந்தியடிகள் ஒருமுறை இயேசுநாதரின் மலைசொற்பொழிவைப் பற்றிய நூலைப் படித்தார். ''தீயவனை எதிர்க்காதே; அவனிடம் உள்ள தீமையை எதிர்த்து நில்; பகைவனிடமும் அன்பு பாராட்டு'' என்னும் கருத்துகள், காந்தியடிகளிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தின. அவர் பகவத்கீதையைப் படித்ததன் மூலம் மன உறுதியைப் பெற்றார். உருசிய அறிஞர் தால்சுதாய் எழுதிய 'உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு' என்னும் நூல் அவருள் தாக்கத்தை ஏற்படுத்தியது. தால்சுதாய் தம் நூலில் 'இன்னா செய்தார்க்கும்' என்னும் திருக்குறளையே மொழிபெயர்த்து எழுதியிருந்தார். அதைப் படித்த காந்தியடிகள் திருக்குறள் மீதும் தமிழ் மீதும் பற்றுக் கொண்டார். அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை ஆகிய உயர்பண்புகள் அவருக்கு இளம் பருவத்திலேயே இயல்பாய் அமைந்தன.

**வினாக்கள்**

1. காந்தியடிகளிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்திய கருத்துகள் யாவை ?
2. காந்தியடிகள் எதனைப் படித்து மன உறுதியைப் பெற்றார் ?
3. காந்தியடிகளிடம் தாக்கத்தை ஏற்படுத்திய நூல் எது ?
4. காந்தியடிகளிடம் இயல்பாய் அமைந்த பண்புகள் யாவை ?
5. 'இன்னா செய்தார்க்கும்' என்னும் குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் யார் ?

## பிரிவு – V – ( மதிப்பெண்கள் : 26 )

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுது.**

**2 x 8 = 16**

47. (அ) கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'பொருள் செயல்வகை' என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

48. (அ) தமிழ், செம்மொழிக்குரிய பதினொரு தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளது என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) மேனிலைக் கல்வி, பல்துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெற அடிப்படையாக அமைவதை உரிய எடுத்துக்காட்டுகள் தந்து நிறுவக.

### பகுதி – 2

49. **செய்யுள் வடிவில் விடையெழுதுக.** **2 + 2 + 6 = 10**

(அ) 'இடிப்பாரை' ..... எனத் தொடங்கும் குறள்

(ஆ) 'வினை.' என முடியும் குறள்.

(இ) மீன்நோக்கும்... எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப்பாடல்.

# தமிழ் - முதல் தாள்

## (செய்யுள், உரைநடை)

## மாதிரி வினாத்தாள் – 4

காலம் – 2.30 மணி | மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **ஐந்து பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.** 6 x 1 = 6

1. ஏலாதி ____________ நூல்களுள் ஒன்று.

   (அ) பதினெண்மேற்கணக்கு (ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
   (இ) ஐம்பெருங்காப்பியங்கள் (ஈ) பத்துப்பாட்டு

2. பாரதிதாசனார் ____________ என அழைக்கப்படுகிறார்.

   (அ) புரட்சிக்கவிஞர் (ஆ) தேசியக்கவிஞர் (இ) உவமைக்கவிஞர் (ஈ) ஆசுகவிஞர்

3. சரஸ்வதி அந்தாதி ____________ இயற்றிய நூல்களுள் ஒன்று.

   (அ) கம்பர் (ஆ) ஒட்டக்கூத்தர் (இ) புகழேந்தி (ஈ) ஒட்டக்கூத்தர்

4. ‘ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப்பணி அனைத்துத் துறைகளிலும் கொடுக்கப்பட வேண்டும்’ என்று கூறியவர். ____________ .

   (அ) பெரியார் (ஆ) அம்பேத்கர் (இ) திரு.வி.க. (ஈ) கீ.ஆ.பெ. விசுவநாதம்

5. பீமாராவ் என்பது அம்பேத்கரின் ____________ .

   (அ) தந்தை (ஆ) அண்ணன் (இ) ஆசிரியர் (ஈ) நண்பர்

6. ஆய கலைகள் ____________ .

   (அ) அறுபத்து நான்கு (ஆ) அறுபத்து மூன்று
   (இ) அறுபத்து இரண்டு (ஈ) அறுபத்து ஐந்து

**பகுதி – 2**

**கோடிட்ட இடத்தை நிரப்பி எழுதுக.** 6 x 1 = 6

7. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல் ____________.

8. அப்பூதியடிகள் ______________ என்ற ஊரைச் சார்ந்தவர்.
9. முத்திக் கனியே! எனத்தமிழைப் புகழும் நூல். ______________.
10. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் ______________ ஆவார்.
11. இலெமூரியாவை ______________ என்பர்.
12. குலசேகர ஆழ்வார் பாடிய பாடல்களின் எண்ணிக்கை ______________ ஆகும்.

பகுதி – 3

**இ) பொருத்துக.** **4 x 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. செருக்கு | – | காடு |
| 14. கான் | – | இறுமாப்பு |
| 15. வேதனை | – | தொங்குதல் |
| 16. ஞாலுதல் | – | துன்பம் |

பகுதி – 4

**தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க.** **4 x 1 = 4**

17. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் தால்சுதாய் ஆவார்.
18. இராமலிங்கர் இறையருள் பெற்ற திருக்குழந்தை என்று பாராட்டப்பட்டார்.
19. இடைநிலை ஆசிரியர் கல்விப்பயிற்சி ஈராண்டுகள் ஆகும்.
20. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.

**பிரிவு – II ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

21. பலகற்றும் கல்லார் அறிவிலார் யார் ?
22. காலமறிந்து செயல்படுவது எவ்வாறு ?
23. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்குக் கொண்டு சென்றான் ?
24. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன ?
25. 'நும்பேர் எழுதாதே வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்' யார் யாரிடம் கூறியது ?
26. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?
27. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது ?

**பகுதி – 2**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **5 x 2 = 10**

28. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் யாவை ?
29. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் யார் ?

30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?

31. கனிமவியல் அறிவு பற்றிச் சிலப்பதிகாரம் கூறுவன யாவை ?

32. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை ?

33. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

34. தற்போது வளர்ந்து வரும்இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

## பிரிவு – III ( மதிப்பெண்கள் : 24 )

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

35. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை ?

36. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

37. போலிப் புலவர்களைத் தண்டித்தோர் யாவர் ?

38. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – குறிப்பு எழுதுக.

39. சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார் ?

### பகுதி – 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையெழுதுக.** **3 x 4 = 12**

40. ஒழுக்கம் குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

41. பேச்சின் முக்கூறுகளை விளக்குக.

42. தமிழர், இசைக்கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதை விளக்குக.

43. இன்னாசெய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

44. பட்டதாரி ஆசிரியர் பணிக்குரிய கல்வித்தகுதிகள் குறித்து எழுதுக.

## பிரிவு – IV ( மதிப்பெண்கள் : 10 )

45. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் – வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் – சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் – கட்டி

1. இப்பாடலில் குறிப்பிடும் புலவர்களின் பெயர்களை எழுதுக.
2. செவியறுத்து – பிரித்து எழுதுக.
3. சீத்தையர் – பொருள் எழுதுக.
4. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
5. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?

46. **கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.** **5**

'வினையே ஆடவர்க்குயிர்' என்கிறது குறுந்தொகை 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்கிறது தொல்காப்பியம். சங்க காலத்தில் பொருளீட்டுவோர் ஆண்களே எனவும், பெண்கள குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், பெண்கள் கடல் கடந்து செல்லக்கூடாதெனவும் கூறி வந்தனர். இன்று இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். இன்றைய சூழலில், இருவரும் வருவாய் ஈட்டினால்தான் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த இயலும்.

பள்ளிக்கல்வியை முடித்த ஒருவர், அதற்கு மேல் என்னென்ன படிப்புகளை மேற்கொண்டு, வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறித்த விழிப்புணர்வை ஒவ்வொருவரும் பெற வேண்டும். தற்போது மேனிலைக்கல்வியில் தேர்ச்சி என்பதுதான் பெரும்பாலான பணிகளுக்கும் அடிப்படை என்னும் நிலை உருவாகியுள்ளது.

**வினாக்கள்**

1. ஆடவர்க்குயிராகக் குறுந்தொகை எதைக் குறிப்பிடுகிறது ?
2. முந்நீர் – விரித்தெழுதுக.
3. மகடூஉ – இச்சொல்லின் பொருள் யாது ?
4. தற்போது பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படையாக அமையும் கல்வி எது ?
5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## பிரிவு – V ( மதிப்பெண்கள் : 26 )

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுது.**
**2 x 8 = 16**

47. (அ) கண்ணகி பாண்டியனிடம் உரைத்த கூற்றிலிருந்து அவளது சொல்வன்மையை எழுதுக.

(அல்லது)

(ஆ) பெரியாரைத் துணைகோடல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48. (அ) சிறுதொழில் கல்வி, இராணுவம் மற்றும் காவல்துறைப் பணியினைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ)தமிழ்மொழியின் இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

### பகுதி – 2

49. **செய்யுள் வடிவில் விடை தருக.** **2 + 2 + 6 = 10**

(அ) 'பல்லார்' ..... எனத் தொடங்கும் குறள்

(ஆ) 'பொருள்.' என முடியும் குறள்.

(இ) 'துன்புள தெனின்...' எனத் தொடங்கி ......... 'ஐவர்கள் உளரானோம்' என முடியும் கம்பராமாயணப் பாடலடிகள்.



www.kalvisolai.com - 22 of 22.